(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 198.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 யூலை 05, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0598/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) இலங்கையில் அடுத்த 8 வருடங்களில் எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி யாதென்பதையும்;

(ii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா வருமானத்தை வருடவாரியாக யாதென்பதையும்;

(iii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா கடன் சுமையை வருடவாரியாக யாதென்பதையும்;

(iv) 01.01.1994, 01.01.2005, 01.08.2010 ஆகிய திகதிகளில் உள்ளவாறு, தலா ஈட்டல்களினதும் கடனினதும் பெறுமதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1272/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதிலும் உள்ள மாகாண பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளில் காணப்படுகின்ற 3174 அழகியல் கலை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அழகியல் கலை பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதென்பதையும்;

(ii) அதன் படி நடத்தப்பட்ட எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறிய எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் இதுவரை அழகியல் கலைப் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த ஆசிரியர் நியமனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதிருக்கும் அனைத்து அழகியல் கலை ஆசிரியர் வெற்றிடங்களுக்கும் பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படாவிட்டால், மீதி அழகியல் கலைப் பட்டதாரிகளுக்கு எப்போது நியமனங்கள் வழங்கப்படும் என்பதையும்;

(ii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1724/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியில் இன்டஸ்ரியல் பினான்ஸ் லிமிடட் (Industrial Finance Limited) என்ற பெயரில் வங்கியல்லாத நிதி நிறுவனமொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதா;

(ii) அது பதிவுசெய்யப்பட்ட திகதி யாது;

(iii) அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் நிதித்துறையில் அவர்களது அனுபவங்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பபிடுவாரா?

(ஆ) (i) இந்த கம்பெனி இதற்கு முன்னர் வேறு கம்பனியொன்றுக்கு சொந்தமாக இருந்ததா;

(ii) அவ்வாறெனின் அந்த கம்பனியின் பெயர் யாது;

(iii) அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்ச சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) I.F.L கம்பனியில் தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அதில் பணம் வைப்பிலிட்டுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) 2011 மார்ச் 31ஆந் திகதிக்கு அந்த கம்பனிக்கு உரித்தாக இருந்த வைப்புகளின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1735/ '11

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011ஆம் கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகம் மற்றும் ஒவ்வொரு பாடநெறிக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பீடத்திற்குமாக இணைத்துக்கொள்ளப்பட்ட மேற்படி மாணவர் எண்ணிக்கையானது 2011ஆம் கல்வி ஆண்டுக்காக அந்தந்தப் பீடங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு மாணவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்காகவும் அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதனூடாக அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்குக் கிடைத்த வருமானம் யாதென்பதையும்;

(iii) அந்தப் பணம் எப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) குறித்த பணம் அரசின் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2085/ '11

5.

கௌரவ சஜித் பிரேமதாச,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரிவின் வளவை திட்டத்திற்கு உரித்தான ரிதியகம வாவியின் கீழ் எத்தனை ஏக்கர் பயிர்ச்செய்கைக் காணிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தின் நீரை அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படுகின்ற துறைமுகம் உள்ளிட்ட அபிவிருத்தி வலயத்துக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், பெற்றுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நீரின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடிகள் என்பதையும்;

(iv) மேற்படி நீர் ரிதியகம நீர்த்தேக்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுமாயின், குறித்த வாவியின் கீழ் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளுக்கு நீர்ப்பற்றாக்குறை காரணமாக ஏற்படக்கூடிய சேதங்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நீர் வழங்களை பெற்றுக் கொடுப்பதற்காக ரிதியகம நீர்த்தேக்கத்துக்கு போதியளவு நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மாற்று வழிமுறைகளை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(vi) அதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) அதற்காக செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2101/ '11

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு முதலாவது மாணவர் குழு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர் குழு தமது பட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு அத்தியாவசியமான பேராசிரியர் அலகு தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) பேராசிரியர் பிணி ஆய்வுப் பயிற்சி இம்மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதலாவது திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பேராசிரியர் பிணி ஆய்வுப் பயிற்சிக்குத் தேவையான கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், முடிவடைந்த திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பேராசிரியர் பிணி ஆய்வுப் பிரிவுக்குத் தேவையான தாதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தற்போது சுகாதார அமைச்சினால் மேற்படி அலகிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தாதிமார்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2109/ '11

7.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் (Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

1757/ '11

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இராணுவத்துடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையையும்;

(ii) இது அனுமதிக்கக் கூடியதாவென்பதையும்;

(iii) இராணுவத்துடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 20 கம்பனிகளின் பெயர்களை அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களுடனும்;

(iv) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011ஆகிய ஆண்டுகளுக்கான ஒவ்வொரு கம்பனியினதும் வர்த்தகப் பெறுமதியை தனித்தனியாகவும்;

(v) மேற்படி கம்பனிகள் இராணுவத்திடமிருந்து வியாபார வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் போது கேள்விப்பத்திர அனுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும்;

(vi) இன்றேல், ஏன் அவ்வாறு நடைபெறுகின்றதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1823/ ’11

9\.
கௌரவ புத்திக பத்திரண,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் வதியும் திரு. ஹென்றி நெல்ஸன் ரத்னாயக்க திஹகொட சந்தியில் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை நடாத்தி வருகின்றார் என்பதையும்;

(ii) இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோல் விற்பனைக்காக பல தடவைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் அனுமதி கோரிய போதிலும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா

(ஆ) (i) இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஏனைய எரிபொருள்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கையில் பெற்றோல் விற்பனைக்கு அனுமதி வழங்காமைக்கான காரணம் யாது;

(ii) திரு. நெல்ஸன் ரத்னாயக்கவுக்கு பெற்றோல் விற்பனைக்கான அனுமதியை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அவ்வாறாயின் அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2069/ ’11

10\.
கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கொழும்பு பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்துள்ள,

(i) வெளிநாட்டு நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் முதலீடு செய்துள்ள பணத்தொகை யாது;

(ii) மேற்படி முதலீடுகளில் தற்போது தமது முதலீட்டினை நீக்கிக்கொண்டுள்ள நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி முதலீடுகள் நீக்கிக்கொள்ளப்பட்ட திகதிகள் யாவை;

(iv) மேற்படி முதலீடுகளை நீக்கிக்கொண்டமைக்கான காரணங்கள் காட்டப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், அக்காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2212/ ’12

11\.
கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர மாடி வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களுக்கு மேற்படி வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நகர மாடி வீடுகளின் அறுதி உரிமையை அதில் வசிப்பவர்களுக்கு வழங்குதல் எவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) இற்றைவரை மாடி வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1798/ '11

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட சில இடங்களில் குடியிருப்போர் அவர்களின் தற்போதைய வாழ்விடங்களிலிருந்து வெளியேற வேண்டுமென ஏன் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அத்தகைய அறிவித்தல் எவ்வடிப்படையில் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) 2011 ஜூன் 1 முதல் இற்றைவரை அவர்களை வெளியேற்றிய பின்னர் நிர்மூலமாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை அவை சார்ந்த தேர்தல் தொகுகளுடனும்;

(iv) அவ் வீடுகளை உடைக்குமாறு கட்டளையிட்ட அமைச்சையும்;

(v) வெளியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு மாற்றீடாக வழங்கப்பட்ட வாழ்விட வசதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) வெளியேற்றப்பட்ட மக்களில் சிலர் அவர்களது வாழ்விடங்களில் 30 வருடங்களுக்கும் மேலாக வசித்துள்ளார்கள் என்பதையும்;

(ii) சில குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் வீடுகள் உடைக்கப்படுவதற்கு முன்னர் மாற்றீடாக வீடுகள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1824 / '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் திஹகோட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அலவத்தாகொட அணைக்கட்டு மற்றும் பெத்தரே அணைக்கட்டு இற்றைக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டதென்பதையும்;

(ii) தற்போது அலவத்தாகொட அணைக்கட்டின் மற்றும் பெத்தரே அணைக்கட்டின் கதவுகள் உடைந்துள்ளன என்பதையும்;

(iii) அவ்வாறு மேற்படி அணைக்கட்டுகள் அழிவடைவதற்கான காரணம் தரநியமமின்றி நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையே என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அணைக்கட்டுகளை புனரமைப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட்டதா என்பதையும்;

(iii) மேற்படி இரண்டு அணைக்கட்டுகளையும் மீண்டும் ஒப்பந்தகாரரின் மூலமாகவோ அல்லது வேறு நிதி ஏற்பாட்டின் மூலமாகவோ துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2070/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் பெயர் யாது;

(ii) இதற்கு முன்னர் இவர் வகித்த பதவிகள் யாவை;

(iii) இவரது கல்வித் தகைமைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை மேற்படி பணிப்பாளர் நாயகம் கடமைசார்ந்த ரீதியில் விஜயம்செய்துள்ள வெளிநாடுகள் யாவை;

(ii) மேற்படி விஜயங்களுக்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை மற்றும் ஒவ்வொரு விஜயத்தின்போதும் அடையப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2213/'12

15.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் தொழில்புரிபவர்களுக்கு அரசினால் 30% பங்களிப்புத் தொகை வழங்கப்படுகின்றதான வீடமைப்புக் கடன் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்,

(ii) இற்றைவரை மேற்படி வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2012 மே மாதம் 09 ஆம் திகதிய 1757/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பிரிவின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் அதன் அங்கத்தவர்களினதும் எரிபொருள் கொடுப்பனவுகள் 2012.05.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது —

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கு மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 225 லீற்றரையும் அதன் அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 170 லீற்றரையும் வழங்க அல்லது அதற்குச் சமமான சந்தை விலைகளுக்கேற்ப கொடுப்பனவொன்றைச் செலுத்த வேண்டுமென்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகளுக்குப் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் பதிலீடு செய்யப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 11.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.